செ.வெ.எண்- 87 நாள்-25.11.2026

பேரூர் வட்டத்தில், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் க.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள், கலந்துகொண்டு பல்வேறு அரசு துறைகளின் சார்பில், 192 பயனாளிகளுக்கு ரூ.2.55 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், தீத்திபாளையம், லோட்டஸ் மஹாலில், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், இன்று (25-11-2026) நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் க.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள், கலந்து கொண்டு பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில், 192 பயனாளிகளுக்கு ரூ.2.55 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில், வருவாய் கோட்டாட்சியர் (தெற்கு) திரு.பாலமுருகன், வேளாண்மைத்துறை (இணை இயக்குநர்) திருமதி.தமிழ்செல்வி, தாட்கோ (பொது மேலாளர்) திரு.ரஞ்சித்குமார், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.வாணிலட்சுமி ஜெகதாம்மாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.ஆனந்தகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.வசந்தராம்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.மணிமேகலை, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ஸ்ரீராம், பேரூர் வட்டாட்சியர் திரு.சுரேஷ்குமார் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இம்முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மக்கள் தொடர்பு முகாம் மூலம் ஒவ்வொரு வட்டத்தில் உள்ள கிராமத்தை தேர்வு செய்து, அந்த ஊரின் தேவைகள் குறித்து மனுக்களாக பெற்று, அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு நேரில் சென்று பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தியதை தொடர்ந்து, இன்று, பேரூர் வட்டத்தில் நடைபெறும் மக்கள் தொடர்பு முகாமில் பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இம்முகாமில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இரத்த அழுத்தம், சர்க்கரை உள்ளிட்ட பரிசோதனைகளை மேற்கொள்ளலாம்.

நமது வீடு மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். டெங்கு உள்ளிட்ட நோய்கள் வராமல் தற்காத்துக் கொள்ள வேண்டும். மாவட்ட நிர்வாகம் சார்பில், டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மேலும், இப்பகுதியில், அதிக அளவில் விவசாய சாகுபடி உள்ளதால் வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, மற்றும் தோட்டக்கலைத் துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில், விவசாயிகள் பயன்பெறும் வகையில் மானியத்தில் நலத்திட்ட உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இம்முகாமிற்கு ஏற்கனவே மக்களிடம் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் 192 பயனாளிகளுக்கு ரூ.2.55 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களால் வழங்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். இங்கு பல்வேறு அரசுத்துறைகள் மூலம் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பார்வையிட்டு, அரசு திட்டங்கள் குறித்து அறிந்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், வருவாய்த்துறையின் சார்பில், 41 பயனாளிகளுக்கு உட்பிரிவின் கூடிய பட்டா மாறுதல்களும், ரூ.1,04,400/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.36,30,000/- மதிப்பிலான பயிர்க்கடன், கால்நடை பராமரிப்புக்கடன், மகளிர் சுய உதவி குழு கடனுதவிகளையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு சொட்டுநீர் பாசனம் மற்றும் கிடங்கு அமைப்பதற்கான ரூ2,12,830/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தாட்கோ சார்பில், 12 பயனாளிகளுக்கு ரூ.31,45,158/- மதிப்பில் வாகனங்கள் வாங்குவதற்கான மானியத் தொகையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 1 பயனாளிகளுக்கு ரூ.9,500/- மதிப்பிலான வீல்சேர், வேளாண்மைத்துறையின் சார்பில், 6 பயனாளிகளுக்கு ரூ.26,050/- மதிப்பிலான சோளம், நுண்ணூட்ட கலவை உரங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளும், மகளிர் திட்டத்துறையின் சார்பில், 55 பயனாளிகளுக்கு ரூ.16,50,000/- மதிப்பிலான தொழில் தொடங்க கடனுதவிகளையும், வேளாண்மை பொறியியல்துறையின் சார்பில், 2 பயனாளிகளுக்கு ரூ.1,45,065/- மதிப்பிலான களை எடுக்கும் இயந்திரங்களும் மாவட்ட வழங்கல்துறையின் சார்பில் 45 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளும், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், 18 பயனாளிகளுக்கு ரூ.1,66,32,000/- மதிப்பிலான வீடு ஒதுக்கீடு ஆணைகளையும், ஊரக வளர்ச்சிதுறையின் சார்பில், 4 பயனாளிகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு மற்றும்

கட்டட வரைபட அனுமதி பெறுவதற்கான ஆணைகள் என மொத்தம் 192 பயனாளிகளுக்கு ரூ.2.55,55,003/- கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல்துறை உள்ளிட்ட அரசுத்துறைகளின் சார்பில், அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

வெளியீடு-செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்ட அரசு செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள:

collectorCoimbatore collectorCbe Pro Cbe cbe_pro prokovai22